**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A**.75/2017
**E.P**.91/1997
**அசல் வழக்கு எண்**.193/1996

2019 **ஆண்டு மார்ச் மாதம்** 1 **ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேஷ்வரன் | வயது | 48 |
| த.பெ. | காமாட்சி | மதம் | |
| முகவரி | | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர், திருப்பூர் தெற்கு |

**நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு** 27 **ம் சாட்சி** (**PW**27) (01.03.2019)

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 01.07.2018 தேதி முதல் திருப்பூர் மண்டல துணை வட்டாட்சியராக பணி புரிந்து வருகிறேன். நான் ஒப்படைத்துள்ள சாட்சி சான்றவாணம் 9 ஆவணத்தை பற்றி எனக்கு நேரிட்டு எதுவும் தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வீரபாண்டி கிராமம் க.ச.எண்.481 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் நான் எடுத்து வந்துள்ள ஆவணத்தில் மொத்த விஸ்தீரனம் குறிப்பிடப்படவில்லை, மொத்த விஸ்தீரனத்தை பற்றி எனக்கு தெரியாது. க.ச.எண்.481/3 ல் முனியனுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. க.ச.எண்.481/3 முருகேசனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பசலி 1397 மற்றும் பசலி 1398 ஆண்டுகளுக்கு அடங்கல் கணக்கில் முருகேசன் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பசலி 1397 மற்றும் பசலி 1398, 1987 மற்றும் 1988 ஆங்கில வருடங்களுக்கு உட்பட்டது என்றால் சரிதான்.

க.ச.எண்.481 க்கு 1969 ஆம் வருடத்தில் வருவாய் கோட்டாட்சியர் நிபந்தனை பட்டா வழங்கியுள்ளார். க.ச.எண்.481 ஆரம்ப காலக்கட்டத்தில் அரசு புறம்போக்கு நிலமாகும். எதன் அடிப்படையில் க.ச.எண்.481 அரசு புறம்போக்கு நிலம் என்றும், நிபந்தனை பட்டா வழங்கப்பட்டுள்ளது என நான் தெரிவித்துள்ளேன் என்றால் சாட்சி சான்றாவணம் X 9 ஆவணத்தில் உள்ள மேல்குறிப்பின் அடிப்படையில் தெரிவித்தேன். 02.05.1990 தேதியில் மாவட்ட ஆட்சியர் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் 09.05.1990 தேதியில் க.ச.எண்.481/3 யை பொறுத்து முருகேசன் பெயர் நீக்கம் செய்யப்பட்டு தரிசாக மாற்றி நத்தமாக மாற்றப்பட்டுள்ளது என சாட்சி சான்றாவணம் X 9 ஆவணத்தில் மேல்குறிப்பு உள்ளது. ந.க.71962/89/A2 நாள் 02.05.1990 தேதியிட்ட மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகள் மற்றும் 09.5.1990 ந.க.எண்.16448/89/A6 வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவுக்கான கோப்பை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் பெயர் நீக்கம் செய்தது சம்மந்தமாக முருகேசனுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவாச்சொத்து சம்மந்தமாக நடைபெற்ற அசல் வழக்கு எண்.193/1996 யை பற்றி எனக்கு தெரியாது. 30.04.1990 தேதியில் முருகேசன் தாவாச்சொத்தை பொறுத்து திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான், அப்போதைய கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.